மலர் 1 இதழ் 4 ஏப்ரல், 2017 ISSN : 2454-3993

# வ.சுப.மா.வின் பல்நோக்கு ஒப்பியல் களங்கள்

**முனைவர் மா.தமிழ்ச்செல்வி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
கணேசர் கலை அறிவியல் கல்லூரி,
மேலைச்சிவபுரி

## முன்னுரை

ஒப்பியல் நோக்கு என்னும் நூல் ஒப்பியல் களங்களைக் கூறுவது. ஒப்பீடு என்பது ஏற்றத் தாழ்வுகளை எடுத்துக் கூறுவதன்று. ஓரினப்பட்ட நூல்களில் வேறுபட்ட இயல்புகளைச் சுட்டிக்காட்டுவதாகும். இரு நூல்களிலும் ஒரே விதிகள் இருப்பவைகளைத் தமது ஒப்பீட்டு ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ளார் வ.சுப.மாணிக்கம். இவ்விரு நூல்களின் வேற்றுமைகளையும் வேற்றுமைக்கான காலச்சூழலையும் அறிந்து கொள்வதை ஒப்பீட்டின் பயனாகக் கண்டுள்ளார். நூல்களின் பெருமை சிறுமைகளைச் சுட்டாது சுவையையும், பண்பையும், நெறியையும் சுட்டிக்காட்டும் முறையில் ஒப்பாய்வு அமைந்துள்ளது. தமிழின் ஒப்பற்ற நூல்களான தொல்காப்பியம், திருக்குறள் முதல் கண்ணதாசனின் தைப்பாவை வரை வ.சுப.மா.வின் ஒப்பியல் நோக்கு அமையப்பெற்றுள்ளது.

## திருக்குறள் - ஒப்பாய்வு

திருக்குறள் உத்திகள் மற்றும் திருக்குறளும் தம்மபதமும் என்ற இரு கட்டுரைகளில் திருக்குறளை

முதற்பொருளாக்கி ஒப்பியல் காணுகிறார் வ.சுப.மா. பாடபேதம், தொடர், புணர்ச்சி நிலைகள், இலக்கணம், தொகைச்சொல், தனிச்சொல் ஆகியவைகளால் உரை வேற்றுமைக்கு இடம் ஏற்பட்டது என்பது வ.சுப.மா.வின் கருத்து. திருவள்ளுவர் காலத்தில் தமிழ்மொழி நடையில் சில மாற்றங்கள் ஏற்பட்டன என்றும் இதனால் பொருள் மயக்கம் ஏற்பட்டது என்பதும் அவர்தம் கூற்று. குறள்கள் ஒலிநயத்தில் ஒப்புமைக்காட்டி உரைப்பொருளில் வேற்றுமைக்கு வித்திட்டன. ஒலிநயம் விரைவில் உரையாய் வளர்ந்தது" (ப.14) என்று கூறி மயக்க மொழிநடை திருவள்ளுவர் காலத்தில் பிறந்தது எனத் தன் ஒப்பியல் கருத்தை வெளிப்படுத்துகிறார். ஈரடியில் அமைந்து நுணுகிய கருத்துள்ளதாக விளங்கும் திருக்குறளில் பல்வேறு எழுத்து உத்திகள் உள்ளன என்று கூறும் வ.சுப.மா. இவ்வுத்திகள் பொருள், உரை பற்றிய மயக்கங்களைக் களைவதாகவும் குறிப்பிடுகிறார்.

"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு" (கு.20)

என்னும் திருக்குறளுக்குப் பல உரை வேற்றுமைகள் இருப்பதை எடுத்துக்காட்டும் வ.சுப.மா. இது அளவை முறையில் அமைந்த கருத்தினை நிறுவக்கூடிய குறளுத்தி ஆகும் என்கிறார். இந்த அளவுத்தியை,

"தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைபொருட்டால் ஊன்தருவாரில்" (கு.256)

என்ற அருமைத் திருக்குறளிலும் காண்கின்றோம். ஆதலால் உலகிற்கு நீர் வேண்டும், நீருக்கு வானொழுக்கு வேண்டும் என்ற பொருளே - வான் சிறப்பினைத் துணிந்து மடிக்கும். இக்கருத்தே இக்குறளின் நேர்ப்பொருளாகும். உரை மயக்கம் இவ்வுத்தியால் தெளிவு பெறுகின்றது" (ப.17) என்பார் வ.சுப.மா. ஒரு குறளின் உரைக்கு பிறிதொரு குறளுடன் ஒப்புநோக்கி உரைகூறும் திறம் சிந்தனைக்குரியது. ஒப்பு நோக்கிப் பார்க்கும் திறத்தை வலியுறுத்துவது. இவ்விதம் பொருள் மயக்கம், கருத்து மயக்கம் தரும் சில திருக்குறள்களை எடுத்துக்காட்டி அவற்றிற்கான உத்திகள் சிலவற்றையும் தம் கட்டுரையில் வெளிப்படுத்துகிறார்.

திருக்குறளின் பல கருத்துகள் மணிமேலையில் எடுத்தாளப்பட்டுள்ளன. பௌத்த சமயம் சார்ந்த நூல் மணிமேகலை. அவ்விதத்தில் பௌத்தத்துடன் திருக்குறளை ஒப்பீட்டு நோக்கில் வ.சுப.மா எடுத்துக் கொண்டுள்ளார் எனலாம். புத்தரின் சயமக்கோட்பாடுகளைக் கூறுவது புத்தரின் தம்மபதம். இரட்டைச் செய்யுள் அமைப்பினது. இதில் நன்மை, தீமை என்பன போன்ற அறக்கருத்துகள் இரு செய்யுட்களில் அமையும். உலகப் பொதுமறையாக விளங்கக்கூடியது திருக்குறள். இரண்டடிகளால் ஆனது. "தம்மபதம் போலத் தீமை நன்மைகளை இரட்டைச் செய்யுளாக அமைக்காவிட்டாலும் இன்ன அறத்தை செய்வதால் வரும் நன்மைகள் இவையென ஒரு பாங்காகவும், செய்யாமையால் வரும் குற்றங்கள் இவையென மறுபாங்காகவும் திருக்குறள் தொகுத்துக் கூறுகின்றது. எனவே தம்மபத நடை நெறியைக் திருக்குறளில் காணலாம்" (ப.189) என்பது வ.சுப.மாவின் முடிவு.

இவ்விரு நூல்களும் குறிக்கும் நடைநெறி அறம் என்பது இதுதான் என்பதை மக்களுக்கு வலியுறுத்துவதாகும். செய்யத்தக்கது இது என்றால் செய்யத்தகாதது இது

என்று நினைவை ஏற்படுத்துதலாகும் என ஒப்பியல் ஒற்றுமையைக் காண்கிறார் வ.சுப.மா. ”நம் உலகத்தையும் பிறப்பையும் துன்பப்பார்வை செய்வதும் முழுத்துறவுக் கூறுவதும் பௌத்தம். இல்லறவின்பங்களையும் உலகியல் வாழ்வுகளையும் தம்மபதம் குறிக்கவில்லை” (ப.190) என்று முறையில் திருக்குறளுக்கும் தம்மபதக்கும் உள்ள நுணுகிய வேறுபாட்டைக் காண்கிறார். ஐம்புலன்களின் இன்பத்திற்காகவே காமத்துப்பால் பாடப்பட்டுள்ளது எனவும், குறள்களில் முதற்கண் சில விதிமுக நடை உள்ளதையும் எடுத்துரைக்கிறார். கோட்பாட்டிற்கும், மொழிநடைக்கும் தொடர்பு உண்டு என்பது இவர்தம் முடிவு.

**காப்பிய ஒப்பாய்வு**

காப்பிய ஒப்பாய்வில் மிருச்சகடிகம் - சிலப்பதிகாரம், இருவகைச் சிலப்பதிகாரம், இராமாயணத்தின் பாடுபொருள் ஒன்றா? பலவா? என்ற கட்டுரைகள் பார்வைக்கு இடனாகின்றன.

**மிருச்சகடிகம் - சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரம் தமிழ் நாடகக் காப்பியம். மிருச்சகடிகம் வடமொழி நாடகக்காப்பியம். அடிப்படையில் ஒற்றுமையும் கூறுபாட்டில் வேற்றுமையும் உடைய இவ்விரு நூல்களும் ஒப்பியல் பார்வைக்கு எடுத்தாளப்பட்டுள்ளன. இவ்விரு நூல்களின் ஆசிரியர்களும் (இளங்கோவடிகள், சூத்திரகன்) பிறப்பால் அரசகுலத்தைச் சேர்ந்தவர்கள். காப்பியத்துக்குக் காரணமான சிலம்பு சிலப்பதிகாரத்திற்குப் பெயராயிற்று. மண்வண்டி ஓட்டும் தாழ்நிலைக் கதைக்குக் காரணமான ஊர்தியின் பெயரே மிருச்சகடிகத்திற்குப் (மண்ணியல் சிறுதேர்) பெயராயிற்று. இரு நாடகங்களும் வணிகர்குலத் தலைவர்களைக் கொண்டன. இவ்விரு வாழ்த்துப்பாடல்கள் உணர்ச்சிப் பொருளை எடுத்துக்காட்டுவன. மேலும் கதைக்கருவும், நாடகமாந்தரும், உவமங்களும், பற்றிய செய்திகளும் ஒப்புக்கூறுகளாக அமைகின்றன.

இவ்வொப்புமைக்குள்ளும் சில வேறுபாடுகளைக் காட்டுவார் வ.சுப.மா. கண்ணகிக்குக் கொடுக்கப்பட்ட இல்லறமதிப்பு மிருச்சகடிகத்தில் மாறுபட்டுள்ளது. கணிகை நங்கையான வசந்தசேனை மிருச்சகடிகத்தில் முதலிடம் பெறுகிறாள். இறுதிவரை பரத்தையர் குலமாகவே பார்க்கப்பட்டவள் மாதவி. ஒழுக்கத்தின் குலமாற்றம் செய்து காட்டியது மிருச்சகடிகம். எல்லாம் ஊழில் நடந்தது என அமைவது சிலப்பதிகாரம். ஆனால் ”மிருச்சகடிகத்தில் தீயூழ் தலைதூக்கி ஆடவில்லை” (ப.30) என்று கூறும் வ.சுப.மா ஊழ் என்னும் அடித்தளமே இரு நூலுக்கும் முக்கியமான வேற்றுமையாயின எனத் தம் முடிபைக் காண்கிறார். அனைத்துவகையிலும் ஒப்புமையுடைய இரு நூல்களில் சில சூழல்களையும் அதனால் உண்டான நுணுகிய மாற்றங்களையும் எடுத்துரைக்கும் பாங்கு திறனாய்வாளர்களுக்குக் காட்டப்படும் புதுமைநெறி.

**அ) இருவகைச் சிலப்பதிகாரம்**

இதில் இளங்கோவின் சிலப்பதிகாரமும், கலைஞரால் எழுதப்பட்ட சிலப்பதிகார

நாடகமும் எடுத்தாளப்பட்டுள்ளன. ”இளங்கோ காப்பியம் மூலநூலாகவும் கலைஞர் நாடகம் அதன் வழித்தட நூலாகவும் எனக்குத் தோன்றவில்லை. இந்த நாடக நூல் ஒரு மூல நன்னூலாகவே இலங்குகின்றது” (ப.36) எனத் தம் ஒப்பீட்டுப்பார்வையை வெளிப்படுத்துகிறார் வ.சுப.மா. நாடக அமைப்பில் இளங்கோவால் காட்டப்படாத தமிழாட்சி கலைஞரால் எடுத்தாளப்பட்டு, தமிழ்ப்பற்றினைத் தூண்டுவதாக அமைக்கப்பெற்றுள்ளது. “காப்பிய சிலம்பு படைத்த இளங்கோவிற்கு வருணனை நாட்டமேயன்றிக் கதை நாட்டம் குறைவு. நாடகச் சிலம்பு எழுதிய கலைஞர்க்குக் கதை நாட்டமும், பாத்திரங்களின் உரைநாட்டமும் மிகுதி. அது காப்பிய இயல்பு, இது நாடக இயல்பு.” (ப.41) என்று கலைஞர் கதைக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதியுள்ளமையைக் குறிக்கிறார். அவ்வாறு கதை அமைவதால் புரட்சிக்கருத்துகளும் கூறப்பட்டுள்ளன. நாட்டில் நிகழும் கிழவன் திருமணத்தைத் தடுப்பதற்காக கிரேக்க நாட்டைச் சேர்ந்த கிழவன் பாத்திரத்தை அமைத்துத் தம் சீர்திருத்தக் கருத்தைக் கூறியுள்ளார். தலைவன் பாத்திரமான கோவலனை ஆற்றல் மிக்கவனாகவும் படைத்து, இருபதாம் நூற்றாண்டின் புரட்சிப் பெண்ணாகவும் கண்ணகியைப் படைத்துள்ளார். இளங்கோ என்ற பாத்திரத்தையும் அமைத்து அதன்வழி தன் கருத்துச் செய்திகளை மொழிவதாக அமைத்துள்ளார். காப்பியக் கதையிலும் மாற்றங்களைக் கொண்டதாகவும் படைத்து ஊழ் வழிப்பட்டதல்ல வாழ்க்கை மதி வழிப்பட்டதே வாழ்க்கை என்பதை அழுத்தமாகப் பதியவைக்கிறார் கலைஞர் என்று நாடகச் சிலம்பின் வேறுபாடுகளைக் காட்டுகிறார் வ.சுப.மா. பகுத்தறிவு முறையில் அமைந்தது கலைஞரின் நாடகம் என்பது அவரின் ஒப்பீட்டு முடிவு.

### ஆ) இராமாயணத்தின் பாடுபொருள் ஒன்றா? பலவா?

அறம் வெல்லும், பாவம் தோற்கும் என்பது இராமாயணம் காட்டும் நெறி. பெருங்காப்பிம் என்பது அறம், பொருள், இன்பம், வீடு பற்றி உறுதிப்பொருட்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பது பொதுவிதி. காப்பிய விதி இங்ஙனம் இருக்க இராவணவதம் ஒன்று மட்டுமே இராமாயணத்தின் பாடுபொருள் அன்று என்பது வ.சுப.மா.வின் உறுதிக்கூற்று. வேறுபாடுபொருள் இருக்கலாமே என்றே தன் ஒப்பீட்டைக் காண்கிறார். இறை பிறப்பான இராமபிரான் தேவர்களுக்கு இடுக்கண் செய்தான் என்று இராவணனை எளிதில் வீழ்த்தியிருக்கலாம். “எடுத்தது கண்டனர், இற்றது கேட்டனர்” என்று திறங்காட்டிய இராமபிரானுக்கு இராவணவதம் ஒரு பொருட்டோ” (ப.160) என்ற வினாவினை எழுப்பி இராமாயணத்தின் பாடுபொருளாகாது என்ற வேற்றுமைக்கு இடமாகக் கொள்கிறார். சிறந்த தலைவனாக இராமனைப்படைத்து கற்பு நெறி நீங்காத தமிழ்ப் பண்பாட்டுப் பெண்ணாக சீதையும் காட்டப்பெற்று இவ்வுலக இல்லற மாட்சிகளை வலியுறுத்துவதே இராமகாப்பியம். கம்பர் இக்காப்பியத்தில் பாத்திரங்களின் வழியாக தமது பாடுபொருளையும், கருத்துகளையும் வெளிப்படுத்துகிறார் எனக்கூறும் வ.சுப.மா. இவ்வாறு வரும் பாத்திரங்களின் பொருளெல்லாம் ஒன்றிப்பிணைந்த கூட்டுப் பொருளே காப்பியப் பொருளாம் என்பது அவாதம் முடிவாகக் கொள்கிறார். காப்பியத்தின் பாடுபொருள் வண்ணத்தின் வகைபோல் பலவேயாகும்.

**தொல்காப்பிய ஒப்பாய்வு**

தொல்காப்பியநயம், தொல்காப்பிய உரைநயம், பொருளே உவமம், அவன் என்பது யார், செய்யுளில் காரிகை ஆகியன தொல்காப்பிய ஒப்பாய்வு கட்டுரைகளாக இடம்பெற்றுள்ளன. "செய்யுளியலும் காரிகையையும் சீர் தூக்கிப் பார்ப்பின் முன்னது செய்யுட் கடல், பின்னது யாப்பு வாய்க்கால். முன்னது இலக்கியம் படைக்கும் புலவரை நோக்கியது. பின்னது படைத்த இலக்கியத்தைக் கற்கப் புகும் மாணவரை நோக்கியது" (ப.61) என்பார் வ.சுப.மா. காரிகை கூறும் எழுத்துகளும், தொல்காப்பியம் கூறும் எழுத்துகளிலும் ஒப்பிட்டு ஔகாரக் குறுக்கம் ஒன்று மட்டும் காரிகையில் இல்லை என்பார் வ.சுப.மா. தொல்காப்பியம் நேர், நிரை, நேர்பு, நிரைபு என்னும் நான்கு அசைகளை உடையது. காரிகை நேர், நிரை என்ற இரண்டு அசைகளை மட்டும் கூறுவது. தொல்காப்பியம் திணை, கைக்கோள், பொருள்வகை, களன், காலம், பயன், கேட்போர் மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை என்றிவற்றைச் செய்யுளுள் கொண்டது. இத்தன்மை காரிகையில் இல்லை. மருட்பாவையும், வண்ணங்களையும் பொதுவாகவே காரிகை குறிப்பிடுகிறது. தொல்காப்பியம் போல ஒவ்வொன்றுக்கும் செய்யுள் இல்லை. தொல்காப்பியத்தில் உள்ள உறழ்கலி, பரிபாடல், பண்ணத்தி ஆகியன காரிகையில் இல்லை. நூற்வகைப் பாக்களொடு பாவினங்கள் கொண்டது காரிகை. ஒவ்வொரு பாவும் தாழிசை, துறை, விருத்தம் என்ற இனங்களைப் பெறுவதைப்போல தொல்காப்பியம் பெறவில்லை என ஒப்பீட்டு வேற்றுமைகளைக் குறிப்பிடுகிறார் வ.சுப.மா. இவை எல்லாவற்றைம் இளம்பூரணர் உரைவழி முடிவு காண்கிறார். உரைகளும் ஒப்பீட்டுக்கு உரியவை என்பது இக்கட்டுரை காணும் முடிவாகும்.

**தொல்காப்பிய நயம்**

தொல்காப்பிய நயம் என்பதே புதுமையானது. எவரும் காண முற்படாதது. ஆனால் அதன் இலக்கிய வனப்பின்வழி இவ்வாராய்ச்சியை மேற்கொண்டுள்ளார். வள்ளுவரின் குறள்களில் சிலவற்றை மேற்கோள் காட்டும் வ.சுப.மா. திருக்குறளில் இவ்வித நயங்கள் தோன்ற காரணமாக இருந்தவர் தொல்காப்பியரே என்று கூறி "தழுவிக் கொண்ட குறள்கள் நயமாகுமெனின், தழுவக்கொடுத்த தொல்காப்பியம் நயமாகாதா?" (ப.93) என்று தன் வாதத்திற்கு வலிமை சேர்க்கிறார். இலக்கணமாக இருந்தால் என்ன, குறள் வடிவாக இருந்தால் என்ன பொருள்நயத்திலும், சுவையிலும் வேறுபாடில்லை என்றும் தொல்காப்பிய உரையாசிரியர்களுக்கும் நயத்தன்மை உண்டு என்பதே இவ்வாய்வு காட்டும் பொருளாகும். நூற்பாக்களைக் குன்றாத ஒலியநயத்தொடு நூற்பிக்கும் நோக்கம் தொல்காப்பியரால் நிரம்ப உண்டு என்கிறார்.

"ஒற்றளபெடுப்பினும் அற்றௌ மொழிப"

" வஞ்சி மருங்கின் எஞ்சி உரிய"

என்பன போன்ற இந்த ஓரடி நூற்பாக்களில் பொழிப்பெதுகைகள் அமைந்துள்ளதையும் (ப.101)

"மழையென் கிளவி வளியியல் நிலையும்"

"வெயிலென் கிளவி மழையியல் நிலையும்"

"இருளென் கிளவி வெயிலியல் நிலையும்"

முரண்பட்ட சொற்களை அடுத்தடுத்துத் தொடுக்கும் நடையினை இந்நூற்பாக்கள் காட்டுகின்றன என்பதையும் குறிப்பிடுகிறார். "எண்ணிறைந்த இடங்களில் தொடையழகு நோக்கி எதிர்ச்சொற்களை இணைச்சொற்களாகக் காட்டுறுங் காட்சிகளை இலக்கணம் என்னும் பெயருடைய தொல்காப்பியத்தில் நிரம்பக் காணலாம்" (ப.103) என்பதையும் எடுத்துக்காட்டி, நகைச்சுவை, மருட்கை உணர்வு, அச்சவுணர்வு, வெகுளியுணர்வு, மெய்ப்பாடு, உவகைச்சுவை, இளிவரல் சுவை அமைந்த நூற்பாக்களையும் நம்முடைய பார்வைக்கு விருந்தாக்குகிறார். அகம், புறம் என்று மட்டும் காணாமல் அவற்றிள்ளும் இலக்கிய நயங்கள் உண்டு என்பதை இக்கட்டுரை மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது.

**தொல்காப்பிய உரைநயம்**

தொல்காப்பிய உரையாசிரியர்கள் பெரும்புலமை உடையவர்கள். அவர்கள் கூறும் கருத்துகள், உதாரணங்கள் அறங்களையும் நாட்டு மரபுகளையும் எடுத்துரைக்கும் உரையின என்பது வ.சுப.மா.வின் கருத்து. எனவே உரைகளில் நயம் காணும் தமது ஒப்பாய்வை மேற்கொள்ளுகிறார்.

இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், தெய்வச்சிலையார் என்ற பண்டை உரையாசிரியர்கள் உரை இதில் எடுத்தாளப்பெறுகின்றன. பின் எழுந்த இலக்கண நூல்களுக்கு எல்லாம் கருத்து வழங்கியவை இவ்வுரைகள் எனக்கூறும் வ.சுப.மா இவை நிரல் நயங்கள், அடைமொழி நயங்கள், எடுத்துக்காட்டு நயங்கள், கருத்து நயங்கள் கொண்டவை என்கிறார். ""செங்கடுமொழி" எனத் தொடங்கும் நூற்பாவில் செங்கடுமொழி என்றதனால் செம்மை மனத்தக்கது அன்பையும், கடுமை சொல்லளவில் கசப்பையும் குறிக்கும்" (ப.113) என்பது இளம்பூரணர் கருத்து. உரையாசிரியர்களுள் நயம்மிகக் கண்டவர் நச்சினார்க்கினியர் என வ.சுப.மா. குறிப்பிடுகிறார். "சாத்தன் உண்டான் என்ற வழக்கு நடையிலிருந்து ஆசிரியப்பாவும், கொற்றன் உறங்கினான் என்பதிலிருந்து வெண்பாவும், சாத்தனையறியதார் ஒருவனையும் அறியாதார் என்பதிலிருந்து கலிப்பாவும் தோன்றின" (ப.117) என்பது பேராசிரியர் காட்டும் உரை. இவ்விதம் உரைகளுள் காணப்படும் சொல்நயம், தொடர்நயம், தொடைநயம், காதலும் வீரமும் கூறும் பொருள்நயம் ஆகிய எல்லாம் பெற்று காணப்படுகிறது தொல்காப்பியம்.

"கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை

நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே"

என்ற நூற்பாவில் சுண்டுதல் செயற்கையாக எப்பொழுதோ நிகழ்வது. இமைத்தல் எல்லா உயிர்க்கும் எப்போதும் இயற்கையாக நிகழ்ந்து கொண்டிருப்பது. ஆதலின் இயற்கையளவு முன்னும் செயற்கையளவு பின்னும் வைக்கப்பட்டது" (ப.110) என உரை காண்பார் இளம்பூரணர் என்று எடுத்துக்காட்டி சிறிது வருந்தி முயன்று கற்றால் உரைநயங்கள் அமுதசுரபிகளாக விளங்கும் என்று முடிவு காண்கிறார்.

**அவன் என்பது யார்?**

உரையாசிரியர்களின் நயங்களைக் கண்ட வ.சுப.மா. உரைபேதத்தை எடுத்துக்காட்டும் முகமாக இத்தலைப்பில் ஒப்பாய்வு கண்டுள்ளார். "அவனணங்கு நோய் செய்தான் ஆயிழை வேலன்" என்று தொடங்கும் வெண்பாவிற்கு உரைகண்ட உரையாசிரியர்கள் "முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே (தொல்:39) என்ற நூற்பாவிற்கு எடுத்துக்காட்டாக இளம்பூரணர், தெய்வச்சிலையார், சேனாவரையார், நச்சினார்க்கினியர், கல்லாடர் என்றின்ன தொல்காப்பிய உரையாசிரியர் அனைவரும் ஒருமுகமாக எழுதியுள்ளனர்" (ப.121) என்கிறார் வ.சுப.மா. இதில் அவன் என்பது யாரைக் குறிக்கிறது என்ற கருத்துக்கு இடம் கொடுத்து,

"அருவி யின்னியத் தாடும் நாடன்
""""..
கடவுளாயினுங் ஆக
மடவை மன்ற வாழிய முருகே"

என்ற நற்றிணையில் அமைந்திருக்கும் வெறியாட்டுப் பாடலை எடுத்துக்கொண்டு "இவ்வெண்பாவில் அவன் என்ற சுட்டு காதலனைக் குறிப்பதாகும். தன்னைக் களவில் மணந்த அவன் நோய் செய்தானாக அன்னை முருகனது கடப்பந்தாரைக் கற்பின் நிலை என்னாம்" (ப.124) அவன் என்பது காதலனைக் குறிப்பதாகவும், வெறியாட்டு கற்புக்கு முரண் எனவும் காட்டுகிறார்.

**பொருளே உவமம்**

பொருள் என்பது புலவன் பாடற் பொருளாகச் சொல்ல நினைக்கும் கருத்து. உவமை என்பது அப்பாடற் செய்தியை விளக்க மேற்கொள்ளும் கருத்து (ப.129) என்று உவமயியலில் வரும் உரைகளை ஆய்வாக்குகிறார் வ.சுப.மா. இவைதான் பொருளாக வரவேண்டும். இவைதாம் உவமையாக வரவேண்டும் என்ற பாகுபாடில்லை. "முருகனன்ன சீற்றம்" என மானுடனுக்கு தெய்வ உவமையும், "ஞாயிற் கடற் கண்டாங்கு" எனத் தெய்வத்துக்கு அஃறிணை உவமையும் "பாம்பணந்தன்ன ஓங்கிரு மருப்பு" என யாழின் மருப்புக்கு விலங்குவமையும், "சிறியவன் செல்வம்போற் சேர்ந்தார்க்கு நிழலின்றி" என நிழலுக்கு நீதியுவமையும் இவ்வாறே பொருட்களும் இதற்கிதுவென்பதன்றி எதற்கு எதுவும் வரலாம்" (ப.128) என்று பொருள் உவமமாக வருவதை எடுத்துக்காட்டுகிறார்.

**தைப்பாவை**

தைப்பாவை என்னும் தமிழ்ப்பாவையை இயற்றியவர் கண்ணதாசன். இவரை ஓசையினால் யாப்பமைதி விழும் வண்ணம் பாடிய கவிஞர் எனக்கூறி "வாழும் மனிதரை வாழ்த்தியும், வைதும், நெஞ்சு திறந்து பாடும் சங்கச் சான்றோர்களின் செம்மை இயற்கையுள்ளம் மீண்டும் கண்ணதாசன் கவிதைகளில் மறுமையெய்தி உள்ளது" (ப.48) என்று கவிஞனின் தனித்தன்மைக் காட்டுகிறார். நல்ல பாடலில் பணிவும் பொருளும்

வேண்டும் என்பதை உணர்த்தும் இவர்தம் பொருள்வழியே தன் ஆய்வைக் காண்கிறார் வ.சுப.மா. சைவப்பாவைாகிய திருவெம்பாவையும், வைணப்பாவையாகிய திருப்பாவையும் தழுவித் தைப்பாவையை எழுதியதால் மரபு வழிபட்ட கவிஞர் எனக் காட்டப்பெற்று "கண்ணதாசன் மரபுக்கவி என்னும்போது புரட்சியையும் உள்ளடக்கியே கூறுகின்றேன்" (ப.51) என புரட்சிகவியாக்குகிறார் வ.சுப.மா. அவர் அவ்விதம் உரைப்பதற்காண காரணம் தைப்பாவையின் வழியே காட்டப்படுகிறது. முன்னிரு பாவைகளுக்கும் பொருளால் வேறுபட்டது தைப்பாவை. இது தமிழ்ப்பாவை என்பதை அவர்தம் வாழ்த்துப் பாடல் உணர்த்தி நிற்கின்றது. முன்னிருப் பாவைகளில் அமைந்துள்ள அசைச்சொற்கள் தைப்பாவையில் இடம்பெறவில்லை. தைப்பாவைப் பாடல்கள் பெரும்பாலும் அகப்பொருள்மேல் அமைந்து களவு நிலையையும் கற்பு நிலையையும் விளித்து வருகின்றன என்பதை எடுத்துக்காட்டி "கண்ணதாசனின் தைப்பாவை கவிக்கூற்று, தோழிக்கூற்று, தாய் கூற்று, மக்கள் கூற்று எனப் பாடல்தோறும் வேறுபடக் கொள்ளும் நிலையில் செல்கிறது" (ப.53) என்று உரைகாட்டி தைப்பாவை என்னும் தமிழ்ப்பாவைப் பாடுவதற்குத் தமிழே நினைந்து தமிழால் வாழும் கண்ணதாசன் தகுதியுடையவர் என்று ஒப்பீட்டு முடிவாகக் கொள்கிறார்.

**முடிவுகள்**

குறள்கள் உரை மயக்கத்துக்கு இடம் தந்தாலும் அம்மயக்கங்கள் களையும் இடமாக திருக்குறளில் உள்ள உத்திகள் உள்ளன. உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் கூறும் நடைநெறி தம்மபதத்திலும் திருக்குறளிலும் உள்ளது. சிலப்பதிகாரத்தோடு ஒத்தும் உறழ்ந்தும் காணப்படும் நூலாக மிருச்சகடிகம் விளங்குகிறது. பழைய இதிகாசங்களைக் கொண்டு விதியை போற்ற நினைக்கவேண்டாம் என்ற முறையில் கலைஞரின் சிலம்பு நாடகம் அமைந்துள்ளது. இராவண வதம் ஒன்றுமட்டுமே இராமாயணத்தின் பாடுபொருள் அல்ல. சீதைக்குத் தவக்கற்பும், இராமனுக்கு மனைமீட்சியும், இலக்குவனுக்கு தொண்டும், அனுமனுக்கு இராம அன்பும், சூர்ப்பனைக்குக் காதலும் என்பன உள்ளிட்ட பாத்திரங்களின் கூட்டமைப்பே பாடுபொருளுக்கு வித்திடுகின்றன. தொல்காப்பியம், காரிகை இவற்றிற்கான ஒப்புமை வேற்றுமைகளும், தொல்காப்பியத்துள் நயங்களா என வியக்கவைக்கும் இலக்கிய வனப்புகளும் சிந்தைக்குச் சுவை விருந்தாகின்றன. சமய நூலாக இல்லாமல் தமிழ்ப்பாவை நூலாக விளங்கும் தைப்பாவை ஒரு மெய்ப்பாவை நூலாகும்.